# விமான எதிர்ப்பு துப்பாக்கிகளின் தாக்குதலால் ஹெலி, விமானங்கள் மிக உயரத்தில் பறக்கின்றன

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 228 பிரசோற்பத்தி ஆனி 30 ( 14 - 07 - 1991 ) ஞாயிறு

ஆனையிறவில் விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளின் கடும் தாக்குதல்களால் ஹெலிகப்டர்கள், விமானங்கள் வழமையை விட மிகவும் உயரத்தில் பறந்த படியே தாக்குதல்களை நடாத்திவருவதாக ஆனையிறவு யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் வவுனியாவில் இடம்பெற்ற மோதலின் போது ஒரு ஹெலிகப்டர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதனாலும், மற்றொன்று தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதமடைந்து வவுனியா முகாமில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாலுமே ஆனையிறவில் விமானப்படையினர் மிக உயரத்தில் விமானங்களைச் செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது நேற்று முன்தினம் இங்கு புலிகள் தாக்கி இரு ஹெலிகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே போல யாழ் குடாநாட்டுக்குள் பறக்கும் விமானங்களும் வழமையை விட மேலும் உயரமாகப் பறந்து செல்வதையும் காணமுடிகிறது.

# ஆனையிறவு முகாம் பகுதியில் யுத்தம் தொடர்கிறது

## படையினர் தரப்பில் பலர் உயிரிழப்பு

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று நாலாவது நாளாகவும் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் மேலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

விமானங்கள், ஹெலிகப்டர்களின் தாக்குதல் மத்தியிலும் புலிகள் தமது மோதல்களைத்தீவிரப்படுத்தியுள்ளனர்.

இராணுவ முகாமுக்கு அண்மையில் இருந்து புலிகள் தமது நிலைகளை தரப்படுத்தி போரிடுகின்றனர்.

காயமடைந்த இராணுவத்தினரை மீட்கமுடியாத நிலையில் ஹெலிகப்டர்கள் பறந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் பல சிப்பாய்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ப 11 79

## வீரமரணமடைந்த போராளிகள்

ஆனையிறவில் வீரமரணமடைந்துமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் விவரம் வருமாறு:-

அமுதினி (சிவசுப்பிரமணியம் சிவமதி - உரும்பிராய்), றெஜினோல்ட் (சந்தனமாலை கணேஸ்-மட்டுநகர்), சேகரன் (கணபதிப்பிள்ளை இராசநாயகம் - மட்டக்களப்பு), நிமலன் (தங்கவேலு குமரன் - பன்குளம், திருமலை), கருணா (கந்தசாமி சந்திரகுமார் - திருமலை), யோச்சா (செல்லத்துரை அமிர்தலிங்கம் - கோப்பாய்). 74

## ஆறு மாவீரர்களுக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி

ஆனையிறவில் இடம்பெறும் கடும் யுத்தத்தில் மேலும் ஆறு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

பெண் உட்பட ஆறு போராளிகளின் புகழுடம்புகள் புலிக் கொடியினால் போர்த்தப்பட்டு கல்வியங்காடு சந்தையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நான்காவது நாளாகவும் விமானத்தாக்குதல்கள்

நேற்று நாலாவது நாளாக ஆனையிறவு இராணுவ முகாமை அண்டிய பகுதியில் விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றன.

நான்கு பொம்மர்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும், ஒரு வை-12, இரு ஹெலிகப்டர்கள் என்பன மாறி மாறித்தாக்குதல் நடத்தின

ஹெலிகப்டர்கள் தரையிறங்க முடியாதவாறு புலிகள் தாக்குதல் தொடுத்த வண்ணம் இருந்தனர்.

## ஆனையிறவு இராணுவம் குடிநீர் இன்றி அவதி

ஆனையிறவு உப்பள விடுதியிலிருந்தே ஏனைய பகுதி இராணுவத்தினருக்கு கிணற்றிலிருந்து உவர் நீர் வழங்கப்பட்டுவந்தது.

இங்கு புலிகள் நிலைகொண்டுள்ளதால் படையினருக்கு நீர்கிடைக்காமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் முன்னர் ஹெலிகப்டர்மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு படையினருக்கு வழங்கப்பட்டது புலிகள் இங்கு இருப்பதால் ஹெலிகப்டர் தரையிறங்கி குடி நீர் வழங்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74

## களத்திலுள்ள போராளிகளுக்கு மக்கள் பல்வேறு உதவிகள்

ஆனையிறவில் யுத்தம் இடம்பெறுகின்ற சமயம் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு மக்கள் உலர் உணவுகளை சேகரித்து அண்மையில் இருக்கும் முகாம்களில் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் காயமடைந்த போராளிகளுக்கு இளநீர் மற்றும் படுக்கை வசதிகள் போன்றவற்றை சேகரித்தும் வழங்கிவருகின்றனர்.

காயமடைந்த போராளிகளை பராமரிப்பதிலும் தொண்டர் பிரதிநிதிகளும் இரவுபகல் என்று பாராது ஈடுபட்டுவருகின்றனர். (74)

## மணலாற்றில் கடும் சண்டை

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் ஒரு மணித்தியாலம் வரையில் நேற்று முன்தினமிரவு கடும் சண்டை இடம் பெற்றுள்ளது

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிரெஞ் வைத்தியக்குழு, மடுவுக்கும் சென்றது

மடு அகதிமுகாமுக்கு மீண்டும் பிரெஞ் மருத்துவக்குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,

நான்கு டாக்டர்களும், ஒரு தாதியும் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரெஞ் வைத்தியக் குழு

—04 ஆம் பக்கம் பார்க்க

### அஞ்சலிக் கூட்டத்தில் பரா

## ஆனையிறவு யுத்தத்தை உலகநாடுகள் கவனிக்கின்றன

ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் உள்ள ஆனையிறவு இராணுவ முகாமில் எதிரியுடன் யுத்தம் மும்முரமாக நடைபெறுகிறது.

இந்தக் கடும் சண்டையில் போராளிகள் எதிரியைநோக்கி அங்குலம் அங்குலமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு கல்வியங்காடு சந்தைப்பகுதியில்இடம்பெற்ற ஆறு மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 10 இராணுவம் நேற்றுப் புலி

ஆனையிறவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை

—04 ஆம் பக்கம் பார்க்க

### குண்டு வெடிப்பின்போது

## ஓடிய பொலிஸ் அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம்

தமிழ் நாடு ஸ்ரீ பெரம் புதூரில் கடந்த மே மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்பின் போது கடமையிலிருந்து தவறிய குற்றச்சாட்டின் மீது தமிழ் நாடு பொலிஸ் அதிகாரிகள் பன்னிரண்டு பேர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குண்டு வெடித்த போது ராஜீவ் காந்தியின் கூட்ட மேடையில் கடமையில் இருந்ததாகவும்குண்டுச்சத்தத்தைக் கேட்டு பயத்தினால்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஜே.வி.பி யினரின் ஆயுதங்கள் மீட்பு

புத்தளம் பகுதியில் இருந்து எட்டுத் துப்பாக்கிகளை ஆயுதப்படையினர் கண்டெடுத்துள்ளனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

### இராணுவ அதிகாரிகள் தகவல்

## ஆனையிறவில் யுத்தம் ஓய்ந்து வருகிறதாம்

ஆனையிறவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமான சண்டை ஓய்ந்து வருவதாக பி பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

கடந்த நான்கு நாள்களாக நடைபெற்று வரும் இந்த யுத்தம் ஓய்ந்து வருவதாகக் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறியதாகவும் அச்செய்தி தெரிவித்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்கள் இரத்ததானம்

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு நேற்றும் பொதுமக்கள் பலர் இரத்ததானம் செய்வதற்கு வெளிநோயாளர் பகுதியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

### ஆனையிறவு சம்பவத்தால்

## இடம்பெயர்ந்தோருக்கு உடனடி நிவாரணம்

ஆனையிறவுப் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் அப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு ஒரு வாரம் உலர் உணவுப்பொருள்களை நிவாரணமாக உடனடியாக வழங்குமாறு யாழ் அரசாங்க அதிபர் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

—04 ஆம் பக்கம் பார்

## கிராமசேவையாளர் பிரிவை புதிதாக அமைப்பதில்

# தெற்கு-வடக்கிற்கிடையேவேறுபாடு!

கிராமசேவையாளர் பிரிவுகளை ஏற்படுத்துவதில் தென்பகுதிக்கும், யாழ் மாவட்டத்துக்கு மிடையே இரு வெவ்வேறான நடைமுறைகள் அரசினால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

தற்பொழுது யாழ் மாவட்டத்தில் 700 குடும்பங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையிலேயே கிராம சேவையாளர்கள் பணிபுரிந்து வருவதாக அரசின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

ஆனால் தென்பகுதியில் 350 குடும்பங்களுக்கு ஒருவர் கடமைபுரியக்கூடிய வகையில் கிராம சேவையாளர் பிரிவுகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு, மேலதிகமாகபலருக்கு கிராமசேவையாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 106வருட பழமை'வாய்ந்த

### லண்டன் மிருகக்காட்சிசாலைக்குமூடுவிழா

உலகின் மிகப் பழமைவாய்ந்த லண்டன் மிருகக் காட்சிச்சாலை அடுத்த ஆண்டு முதல் மூடப்படவுள்ளது.

106 வருட பழமை வாய்ந்த இந்த மிருகக்காட்சிச் சாலையைப் பராமரிக்க இரண்டு கோடி 80 லட்சம் டாலர் பணம் தேவைப்படுகிறது. ஆனால் இப்பணத்தை வழங்க பிரிட்டிஷ்அரசு மறுத்து விட்டது.

கடந்த வருடம் இந்த மிருகக்காட்சிச் சாலைக்கு 78 லட்சத்து 40 ஆயிரம் டாலர் நஷ்டம் ஏற்பட்டது. தற்பொழுது இங்குள்ள 8,000 மிருகங்கள் வேறு மிருகக் காட்சிச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளன.

லண்டன் மிருகக்காட்சிச்சாலை மூடப்படுவதன் மூலம் மிருகக்காட்சிச் சாலையற்ற ஒரு ஐரோப்பியத் தலைநகராக லண்டன் ஆகிவிடும்.

## திலீபன் நினைவாக தடகள விழா; வட்டவை மட்ட போட்டித் திகதிகள்

திலீபன் நினைவான தடகள விழாவின் வட்டவை மட்ட போட்டிகளை 20 ஆம், 21 ஆம், திகதிகளில் சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர் ஆகிய வட்டவைகளிலும், பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய வட்டவைகளில் 25 ஆம், 26 ஆம் திகதிகளிலும், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானைஆகிய வட்டவைகளில் 27ஆம், 28ஆம் திகதிகளிலும் நடாத்துவதெனதீர்மானிக்கப் பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் வட்டவைப் போட்டிகள்— பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் வட்டவைப் போட்டிகள்— அத்தியார் இந்து மைதானத்திலும், நல்லூர் வட்டவைப் போட்டிகள்— கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், பளை வட்டவைப் போட்டிகள்— இத்தாவில் விளையாட்டு மைதானத்திலும்,உடுவில்வட்டவைப் போட்டிகள்-சுகந்தவரோதய கல்லூரி மைதானத்திலும். சாவகச்சேரி வட்டவைப் போட்டிகள்—மட்டுவில் மகா வித்தியாலயத்திலும், கரவெட்டி வட்டவைப் போட்டிகள் –நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை வட்டவைப் போட்டிகள்— ஹாட்லிக் கல்லூரியிலும், யாழ் வட்டவைப் போட்டிகள்— புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும், தெல்லிப்பளை வட்டவைப் போட்டிகள்—மகாஜனாக்கல்லூரியிலும், மருதங்கேணி வட்டவைப் போட்டிகள்—செம்பியன்பற்று அரசினர் த. க. பாடசாலையிலும், சங்கானை வட்டவைப் போட்டிகள்—அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்திலும் போட்டிகள் நடாத்தப்படும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது

### வண்டி அன்பளிப்பு

வடமராட்சி ஊன முற்றோர் சங்கத்தினால் நடக்க முடியாத நிலையில் உள்ள பொலிகண்டியைச் சேர்ந்த மு. பரராஜசிங்கம் என்பவருக்கு முச்சக்கர வண்டியொன்று அண்மையில் வழங்கப்பட்டது. (50)

### வாடகைக்கு இயந்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளின் நலன்கருதி நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி வருகின்றது.

ஒரு மணித்தியாலத்துக்கு இந் நீரிறைக்கும் இயந்திரத்துக்கு 30 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்பட்டு வருகிறது. (50)

## தெற்கில் பல்கலைக்கழகங்களை மீண்டும் மூடமுயற்சியாம்

தெற்கில்மீண்டும்பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டால் அது தேசிய ரீதியில் பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்துமென உயர்கல்வி அமைச்சர் ஹமீத் எச்சரித்துள்ளார்.

தற்பொழுது தெற்கில் பல்கலைக்கழகங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

ஆனால் சிலர் மீண்டும் மாணவர்களைக் குழப்பி, பல்கலைக் கழகங்களை மூட முயற்சியெடுத்து வருகின்றனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கல்வி அமைச்சின்கீழ் உள்ள

### அமைய ஊழியர் நிரந்தரமாவர்

கல்வி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாத அமையதற்காலிகஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்விச் செயலாளர் அல்லது கல்விச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் இதன்படி நிரந்தரமாக்கப்படுவர்.

கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சகல மாகாணப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் இதனைத் தெரியப்படுத்தி உள்ளார். (78)

## அன்னைபூபதி நினைவுப் போட்டி

## பரிசுபெறும் மாணவர் விவரம்

முல்லைத்தீவு மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு:- சி. துஷாஜினி மு/ஒட்டு சுட்டான் மகா வித்தியாலயம், கீழ்ப்பிரிவு:- பெ. மேரி றெஜினா மு/முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி.

கொத்தணி ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு:- நெடுங்கேணி பீ ஆன்பொன்கலன் மு/நெடுங்கேணி மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு இ.மதுசங்கர் மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முள்ளியவளை த. புஷ்பகலாராணி மு/மு வித்தியானந்தாக் கல்லூரி ஒட்டுசுட்டான் சி. சுதாஜினி மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். கீழ்ப்பிரிவு:- நெடுங்கேணி லோ. விமலராசா மு/நெடுங்கேணி மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு ச காண்டீபன் மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்,முள்ளியவளை பெ.மேரிறெஜினா மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, ஒட்டுசுட்டான் றெஜினால் அமணயோசப் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.

கிளிநொச்சி மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு:- யோகபுரம் சிதம்பரப்பிள்ளை சிவதர்ஷினி கிளி/மல்லாவி மகாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு:- பரந்தன் நிர்மலநாதன் சமுந்தன் கி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.

கொத்தணி ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— மேற்பிரிவு:- கிளி/ யோகபுரம் சிதம்பரப்பிள்ளை சிவதர்ஷினி கிளி/ மல்லாவி மகாவித்தியாலயம், கிளிநொச்சி இராஜேந்திரம் உமாநிதி கிளி/மத்திய மகா வித்தியாலயம், கிளி/உருத்திரபுரம் பங்கரான் ஜோயல்பியசீலன் கிளி/இந்து மகாவித்தியாலயம் கிளி/முரசுமோட்டை கந்தசாமி சிவசுப்பிரமணியம் கிளி/முருகானந்தா மகாவித்தியாலயம், கிளி/பரந்தன் சுப்பிரமணியம் சிவகாமி கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கிளி/பாண்டியன் குளம் சோதிலிங்கம் இதயராசன் கிளி/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு:- யோகபுரம் நவரத்தினராஜா கலைவாணி கி/மல்லாவி மகாவித்தியாலயம், கிளிநொச்சி செல்வரத்தினம் நந்தினி கி/மத்திய மகா வித்தியாலயம், உருத்திரபுரம் பொன்னம்பலம் கேமதர்சினி கி/இந்து மகாவித்தியாலயம், முரசுமோட்டை அன்ரன் நிசாந்தன் கி/முருகானந்தா மகா வித்தியாலயம், பரந்தன் நிர்மலநாதன் சமுந்தன் கி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம், பாண்டியன்குளம் வல்லிபுரம் விக்கினராசா கி/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம். (தொடரும்)


### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

ஞான பாஸ்கரோதய வீதிக்கும், தலங்காவில் பிள்ளையார் கோவில் வீதிக்கும் இடையில் 13. 7. 91 அன்று கைச் சங்கிலி ஒன்று (1½ பவுண் பெறுமதி) 8- 15 மணியளவில் தொலைந்து விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் முரசொலிக் காரியாலயத்தில் அல்லது கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். Miss R. Muthaiah, c/o Velayuthappillai "Santhy Pavanam". G. P. S. Road, Kalviyankadu. 07065

பிந்திய செய்தி !

உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

உள்ளூர் உணவகம்

உங்கள் மனையில் இருந்தபடியே

உணவுண்ணும் நிலை

காரணம் வருகை தந்தவர்கள் அறிவார்கள்

அமைதியான சூழல், நிறைவான உபசரிப்பு, சுத்தம், சுகாதாரம் இவற்றிற்கு முதலிடம். ஒரு காலைப்பொழுதையோ, பகற் பொழுதையோ, மாலைப் பொழுதையோ கழிக்க

ஒரு முறை வருகை தந்து பாருங்களேன்!

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா உணவகத்திற்கு

அறுசுவை அங்கே உங்களுக்காக காத்திருக்கும்

ஜெசித்தாரா

உள்ளூர் உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை

19/3, கொழும்புத்துறைச்சாலை

சுண்டுக்குளி,

யாழ்ப்பாணம்.

ஜோ. எகட்டன் 1986இல் யாழ் ''பீச் இன்'' இல் வழங்கிய ஆடிக் கூழும், தேசிய கூழும் மீண்டும் இங்கு கிடைக்கும். — பந்திக்கு முந்துங்கள்.

விளம்பர அமைப்பு

செனித் விளம்பர முகவர்

07045

தாதியர் பயிற்சி நெறி

TRAINING FOR NURSING

19-07-1991 இல் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன

(சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தாதியருக்குரிய பாடத்திட்டப்பரீட்சைப் பெறுபேறுகள்)

1. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஏற்றது

தகைமை:- க. பொ த. (சாதாரணம்)

காலம்:- 1 வருடம் { பாடத்திட்டம் 6 மாதம் / செய்முறைப் பயிற்சி 6 மாதம்

பயிற்சி நெறிக்கான முழுக்கட்டணம் ரூபா 1500/-

(இலகு தவணை முறைகளில் செலுத்தலாம்)

(மாணவர் தொகையை மட்டுப்படுத்தியுள்ளதால் முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்)

குறிப்பு:- மாவீரர் குடும்பத்தவருக்கு இலவசக்கல்வி

அதிபர்: வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்

சாயி மருத்துவக் கல்லூரி

இல. 6, பருத்தித்துறை வீதி, (1ஆம் ஒழுங்கை)

(மக் ரவல்ஸ் அருகில்)

யாழ்நகர். 07040

## கண்டியில் தமிழ்ச் சங்கம்

கண்டியில் தமிழ்ச் சங்கமொன்று,இன்று கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் சி. தில்லைநாதனின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படும் இத்தமிழ்ச் சங்கம் மத்திய மாகாணத்திலுள்ள பட்டதாரிகளை மட்டும் உள்ளடக்கியதாகச் செயற்படும்.

## பலாங்கொடையில் இளைஞர் கைது

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்புத் தொடர்பாக பிரேம் என்று அழைக்கப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் பலாங்கொடையில் வைத்து கடந்த வியாழன் இரவு கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## இறுதி நாள் நிகழ்ச்சி

வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பதியப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ப 10, 16)

## கரப்பந்தாட்ட முடிவுகள்

கொய்யாத்தோட்ட சனசமூக நிலையம் அதன் 21 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் விளையாட்டுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கொய்யாத்தோட்ட மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் ஆகிய இரு கழகங்களும் வெற்றி பெற்றன.

முதற் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணியிடம் 15 : 10, 12 : 15, 15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கடும் போட்டியின் பின் தோற்றது.

இரண்டாவது போட்டியில் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழகம் பாண்டியன்தாழ்வு றெட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை 15:9, 15:9 என்ற புள்ளிகள் கணக்கில் வெகு இலகுவாகத் தோற்கடித்தது. (16)

## யோகாசன பரிசளிப்பு

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் யோகாசனப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் இம்மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. முதலாம் நாள் நிகழ்ச்சிகள் திவ்விய ஜீவன சங்க மண்டபத்திலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் நடைபெறவுள்ளன.

இரண்டாம்நாள்நிகழ்ச்சியில் முரசொலி ஆளுநர் நாயகம் ம.சிவராசா, சிவதர்மவள்ளல் க. கனகராசா, மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் யோகாசனவல்லுநர் சு. துரைராசா ஆகியோர் மங்கள ஒளி ஏற்றுவர்.

வித்துவான் குமாரசாமி தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் ஈழத்துச் சிவானந்தன், இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்) ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

வஸ்திரதானம் வழங்குதல் பட்டமளித்துக் கௌரவித்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# கொழும்பு நகர வீதிகளில்

## வாகனங்களை அநாதரவாக நிறுத்தத் தடை!

கொழும்பில் சாரதிகளோ, உரிமையாளர்களோ அற்ற நிலையில் வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு எவருமற்ற நிலையில் நகர வீதிகளில் அநாதரவாக நிறுத்தப்படும் வாகனங்கள் பலவந்தமாக உடைத்துத் திறக்கப்பட்டு சோதனையிடப்படுமெனவும், அவை நகருக்கு வெளியே அகற்றப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் மட்டும் கொழும்பு நகர வீதிகளில் அநாதரவாக நிறுத்தப்பட்டிருந்த ஐந்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் பொலிஸாரினால் உடைத்துத் திறக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## விடுதலையான ஜே. வி. பியினர் மீண்டும் கொழும்பில் கைது

கொழும்பில் அண்மையில் பொலிஸார் சுற்றி வளைத்த போது கைதான சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி. என சந்தேகத்தில் பிடிபட்டு விடுதலையானவர்களும் உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இளைஞர்கள் புனர்வாழ்வு என்ற அடிப்படையில் கடந்த வருடம் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கைதான இந்த இளைஞர்களில் ஒரு சிலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. 33

## இன்று குருபூசை

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத்தினம் இன்றாகும். சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் சுவாமிகள் குருபூசை ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினரால் இன்று கொண்டாடப்படுகிறது.

## புதிய கல்வியாண்டு விரிவுரை நவம்பர் முதல் நடைபெறும்

யாழ் பல்கலைக்கழகத்தில் 1990 – 91 ஆம் புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் நவம்பர் மாதம் ஆரம்பமாகுமென பல்கலைக்கழக துணைவேந்தர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இக்கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விரைவில் 'கெல்ட்' பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

## மண்ணெண்ணெய் விலை வீழ்ச்சி வவுனியாவில்லீற்றர்20ரூபா!

வவுனியாவில் மண்ணெண்ணெய்யின் விலை பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

லீற்றர் 20 ரூபாய்க்கு வேண்டுமான அளவு பெற முடியும். ஆனால் தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாக ஐந்து லீற்றர் மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது

சோப் வகைகளும் ஐந்து மட்டுமே ஒருநபர் எடுத்துச் செல்லலாம் என அறிவிப்பு கூறுகின்றது.

பெருமளவு சொப்பிங்பைகளை களவாக எடுத்துச் செல்ல முயன்ற காரைதீவு வர்த்தகர் ஒருவர் வவுனியா சர்வோதய தடை முகாமில் அகப்பட்டு விசாரணையின் பொருட்டு வவுனியா இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (11)

## 3 வருட சேவை புரிந்த ஆசிரியர்க்கு உறுதிப்படுத்தல் கடிதம் கிடைக்கும்

மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்த சகல நிரந்தர ஆசிரியர்களுக்கும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குமாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சகல கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

அத்துடன் சகல ஆசிரியர்களுக்கும் சம்பள மாற்றம் செய்யப்பட்டு நிலுவைகளை வழங்க நடவடிக்கையெடுக்குமாறும், ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளைப் பூர்த்தி செய்யுமாறும் அவர் பணித்துள்ளார்.

உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ள ஒக்டோபர் 6 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வேலைகளை முடிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (78)

## காயமடைந்த போராளிகளை பல்கலைக்கழக மாணவர் பராமரிப்பர்

காயமடைந்த போராளிகளை பராமரிக்கும் தொண்டினை மேற்கொள்ள யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முன்வந்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் நடந்த அனைத்துப்பீட மாணவர்களுக்கான கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக இரத்ததானம் வழங்குவ்தெனவும் இக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

இதன் பொருட்டுபல்கலைக்கழக மாணவர் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ப-12)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்க நடவடிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் பூர்த்தி செய்ய கட்சிமேலிடம் தீர்மானித்துள்ளது.

மறுசீரமைப்பு தொடர்பான சிபார்சுகளைச் செய்வதற்கு என எம். பி.க்கள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் செயல்திறன் மிக்க மத்திய நிருவாக சபை ஒன்றை அமைக்கவும் மேலிடம் தீர்மானித்துள்ளது. 38

## சிவகாசி தீ விபத்தில் இறந்தோர் தொகை 37ஆக அதிகரிப்பு

தமிழகம் - சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இறந்தோரில் அநேகமானோர் அங்கு பணி புரிந்த சிறுவர்களும், பெண்களும் என தற்போது அறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இத்தீவிபத்தில் இறந்தோரின் தொகை 37 ஆக அதிகரித்துள்ளது.85 பேர் காயமடைந்தனர்.

அறைஒன்றில் தீப்பற்றக்கூடிய பொருள்களை வைத்த போது அவை உராய்வினால் தீப்பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது

5 மணி நேரம் போராடி தீயை அணைத்ததாக தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

இறந்தோரின் சடலங்கள் கருகி அடையாளம் காணப்படமுடியாதவாறு சிதைவுற்றிருந்தன.

## கார்மேல் மாதா உற்சவம்

குருநகர் பரிசுத்த கார்மேல் அன்னையின் வருடாந்த திருவிழா கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலையில் நவநாள் ஆராதனை நடைபெற்று வருகிறது.

ஆறு நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும் ஆராதனைகள் எதிர்வரும் 16ஆம் திகதி நிறைவுபெறும் அன்று காலை திருநாள் பூசைப்பலியும் திருச்சொரூப ஆராதனையும் இடம்பெறும். (16)

## திருமலையில் தமிழரின் வீடுகளில் 4000 சிங்களவர்களைக் குடியேற்ற பிக்கு முயற்சி!

திருமலை மாவட்டத்தில் உப்புவெளிமுதல் சாம்பல்தீவு வரை 4000 சிங்களவர்களை தமிழர்களின் காணிகளில் குடியேற்ற பௌத்த பிக்கு ஒருவர் முயற்சி எடுத்து வருவதாக திருமலையிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை லவ்லேன் பகுதியிலும் தமிழர்களுக்குச் சொந்தமான இடங்களைச் சுவீகரித்து சிங்களவர்களைக் குடியேற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்செயல் காரணமாக உப்புவெளி, சாம்பல்தீவு, லவ்லேன் பகுதிகளிலிருந்து பல தமிழ்க் குடும்பங்கள் வெளியேறியுள்ளமையும் அக்காணிகள், வீடுகளில் இப்போது யாரும் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகள் மூடப்பட்டன

வடமராட்சி கிழக்கில் பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பல இடங்களில் மக்கள் வெளியேறியுள்ளனர்.

போக்கறுப்பு, கேவில், கட்டைக்காடு, ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளே மூடப்பட்டுள்ளன. (43)

## சுகாதாரக் கருத்தரங்கு

இன்று மாலை 4 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேதபாரணர் சனசமூக நிலையத்தில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது. யாழ் சுகாதாரத் திணைக்களமும், யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடமும் இணைந்து இக்கருத்தரங்கினை நடாத்துகின்றன (ப-10)

## விசேட அபிஷேகம்

கதிர்காமத் தீர்த்தோற்சவ தினமான இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை பொலிகண்டி கந்தவனம் முருகன் ஆலயத்தில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தால் விசேட அபிஷேகம் நடத்தப்படும்.

அத்துடன் அங்குள்ள சேவாச்சிரமக் கிளையால் சமய விரிவுரைகளும், அன்னதானமும் இடம்பெறும். (50)

## முகாமைத்துவ கருத்தரங்கு

2ஆம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி நெறிக்குப்புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர்களுக்கு இரு வகுதி ரீதியாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

முதலாவது வகுதியினருக்கான பயிற்சி 15ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை 4 நாட்கள் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கான நிகழ்வு அட்டவணை இடைக்காதவர்கள் யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி நெறியில் கலந்துகொள்ளலாமெனவும் பயிற்சியின் போது விரிவுரை, செயலமர்வு, கலந்துரையாடல், பாடசாலை தரிசித்தல் ஆகியன இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## மாங்குளம் வங்கி புனரமைப்பு

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளான மாங்குளம் மக்கள் வங்கிக்கிளை தற்போது துணுக்காய் ப.நோ.கூ சங்கக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இவ் வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் புனரமைக்கும் வேலை தற்பொழுது தொடங்கப்பட்டுள்ளது.

இவ் வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவுச்சங்கங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார்கள் தங்கள் கணக்குகளுக்குரிய வங்கிக் கூற்று,பற்றுச் சீட்டுக்கள் ஆறு மாதங்களுக்குரியவற்றைச் சமர்ப்பித்து தங்கள் கணக்குகளைப் புனரமைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். நடைமுறைக் கணக்கு வைத்திருந்த சகல வாடிக்கையாளர்களையும் மேற்படி கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

# உலர் உணவு விநியோகம் முல்லைத்தீவில் மந்தகதி

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலர் உணவு விநியோகம் மந்தகதியில் வழங்கப்பட்டு வருவதாக நிவாரணம் பெறுவோர் புகாரிடுகின்றனர்

குறிப்பாக விசுவமடுப் பகுதியில் இதுவரை ஆறு கட்ட நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கு நாலு கட்ட இலவச உணவு மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திற்கு கொழும்பிலிருந்து உணவுப் பொருள்கள் வருவதில் ஏற்படும் தாமதத்தால் நிவாரணம் துரிதமாக வழங்க முடியாதிருப்பதாகவும் தெரியவருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு முன்னர் கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. பின்னர் தரைமார்க்கமாக கொண்டு செல்ல அரசு அனுமதி அளித்தது. ஆனால் வவுனியாவில் இராணுவ கெடுபிடியாலும் முல்லைத்தீவு வவுனியா மாவட்டத்தில் அடிக்கடி அமுல் படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச்சட்டத்தாலும் உணவுப் பொருள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது

இதனால் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு துரிதமாக நிவாரண உணவு வழங்க முடியாதிருப்பதாக செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

வெளிமாவட்ட அகதிகள் ஆயிரக்கணக்கானோர் இம்மாவட்டத்தில் அகதிகளாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது 38

# சேதமானவீடுகளைத்திருத்த 10ஆயிரம் ரூபா உதவி

இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்ட வீடுகளைத் திருத்த இதுவரை காலமும் 5000 ரூபாவே அரசினால் வழங்கப்பட்டுவந்தது.

இனிமேல் பத்தாயிரம்ரூபா வழங்கலாம் என புதிய சுற்றுநிருபம் ஒன்று யாழ் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக்கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் யாழ் செயலகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 74


## விசேட அறிவித்தல்

இன்று (14 - 07 - 91) நடைபெறவிருந்த நிகழ்ச்சி நாட்டின் சூழ்நிலை காரணமாக மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

நீராவியடி வண். வடகிழக்கு சனசமூக நிலைய நிதி உதவிக்காக

யாழ் கைலாசபதி கலையரங்கில்

கதகளி பரதகலாமணி இலங்கை வேந்தன் நடனக் குழுவினரின்

**கதகளி பரதநாட்டியம்**

**100ஆவது மேடையாக**

புலவர் தெட்சணாமூர்த்தியின்

**பண்டாரவன்னியன்**

(சரித்திர நாடகம்)



(பண்டார வன்னியனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி)

அன்பளிப்பு:- பட்டப்படிப்புகள் கல்லூரி

07066


முதலமைச்சர் ஜெயலலிதா சொல்கிறார்

# போராளிகளைச் சமாளிக்க தமிழகத்தில் அதிரடிப்படை

தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகளின்ஊடுருவலைத் தடுக்க தமிழக கடற்கரைப் பிரதேசத்தில் கடல் தரை பொலிஸ்படை ஒன்று அமைக்கப்படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

போராளிகளின் நடவடிக்கைகளைச் சமாளிக்க புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு இருபது கோடி ரூபா தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் உள்ள ஆயுதம் தாங்கிய பொலிஸார் அதிரடிப்படையினராக மாற்றப்படுவார்கள்.

இவர்களுக்கு விசேடபயிற்சி வாகனங்கள், தொலைத்தொடர்பு வசதி என்பன அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## அவசர கலந்துரையாடல்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் 14ஆம் திகதி இன்று காலை 9 மணிக்கு யாழ் வைத்தியசாலை சிரமதானம் செய்ய இருப்பதால் சகலரையும் யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பாலம் என்ற பணிமனைக்கு சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியில்

# திருத்திய ஜெனரேட்டர் மீண்டும் பழுதடைந்தது

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் பழுதடைந்திருந்த ஜெனரேட்டர் திருத்தப்பட்டும் மீண்டும் பழுதடைந்துள்ளது.

திருத்தவேலைக்காக இது கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டு திருத்தியபின்னரும் இங்கு கொண்டுவரப்பட்டு பாவிக்கப்பட்டது.

இயங்கியதும் அரை மணி நேரத்தில் மீண்டும் பழுதடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 74

## பாம்புகடித்து பெண் அனுமதி

திருமதி இரட்னேஸ்வரன் ஸ்ரீதேவி (20) என்ற கர்ப்பிணிப்பெண் பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார் இவர் மாங்குளம் ஒலுமடுவைச் சேர்ந்தவர். 79

**10 இராணுவம்...**

பெற்றுவரும் மோதலில் நேற்றுமட்டும் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 30 பேர் காயமடைந்து உள்ளதாகவும் இராணுவ உயரதிகாரி கூறியதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது. ப,11

**ஆனையிறவு...**

உறவு கொள்கை முன்னெடுப்பும் பொறுப்பாளர் பரா கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; எமது மண்ணை அடக்கியாளும் அந்த ஆனையிறவு முகாமான யாழ் மாவட்ட நுழைவாயிலை மீட்க எமதுபோராளிகள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

புலிகளின் ஒவ்வொரு தாக்குதலும் எமது பிரதேசத்தை மீட்பதற்காக நடாத்தப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் ஆனையிறவு யுத்தத்தை உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. இந்நேரத்தில் சிறிலங்கா அரசு முழுப் பலத்தையும் பிரயோகித்து யுத்தம்நடாத்துகின்றது இந்நேரத்திலும் விடுதலைப் புலிகளின் தியாகவீரம் வீண்போகாது என்றார்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள்பலரும் உரையாற்றினர். (74,79)

# சனசமூக நிலையங்களின் போராட்ட கால உதவி

போராட்ட காலத்தில் இரத்ததானம் மற்றும் அத்தியாவசிய சேவைகளை சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் போராளிகளுக்கு செய்ய வேண்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா தெரிவித்துள்ளார்.

யாழ் மாநகரசபைப் பிரதேசத்துக்குள்ளும், நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள்ளும் உள்ள சகல சனசமூக நிலையங்களின் செயற்குழு உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் பேசினார்.

போராளிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்கு சனசமூக நிலையங்களின் மூலம் ஆட்களைச் சேர்த்து ஏற்பாடு செய்யலாம் எனவும் அவர் கூறினார்.

இக்கூட்டம் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.47

# முதலமைச்சர் ஜெயலலிதாவை கொலை செய்ய முயற்சி

தம்மையும் கொல்வதற்கு முயற்சிகள் நடப்பதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழக சட்டசபையில் கூறினார்.

தி மு. க. ஆட்சியின் போது தமிழக காவல்துறை முறைகேடாக பயன்படுத்தப் பட்டதால் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டது என்று அவர் குற்றம்சாட்டினார்'

எதிர்காலத்தில் தமிழக காவல்துறையினர் இந்தியாவில் சிறந்த காவல்துறையாக மாற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சேகரிப்பு

போராளிகளுக்கு உதவுவதற்கு வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதி இளைஞர்கள் வீடுவீடாகச் சென்று தலையணை, பெட்சீற் முதலானவற்றைச் சேகரித்து வருகின்றனர். 12

# பதிவாளர் அலுவலகத்திற்கு ஜெனரேற்றர் வந்தது

யாழ் செயலகத்தில் உள்ள மேலதிக பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய ஜெனரேற்றர் ஒன்று கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இறப்பு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைத் தேடும் வேலை சுலபமாக நடைபெறுமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக் காலமாக பதிவேடுகள் உள்ள அறைக்கு மின்சார வெளிச்சமின்றி பத்திரங்களைத் தேடி எடுப்பது ஊழியர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. 74

**ஜே. வி. பி...**

ஜே வி. பி இயக்கத்தினர் இவற்றை புதைத்து வைத்திருந்ததாகவும், இரகசிய தகவலையடுத்து இவை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிற.து

**பிரெஞ்...**

வின் மீது வவுனியாவில் வைத்து ஹெலிகப்டரில் இருந்து தாக்குதல் நடாத்தப் பட்டதையடுத்து இவர்களின் சேவை நிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது,

**ஆனையிறவில்...**

தது.

இந்த யுத்தத்தில் பத்துப் படையினர் இறந்ததாக அதிகாரிகள் கூறியதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. ப-11

**ஆறு—**

பட்டன.

பெருந்திரளான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியினைக் கண்ணீர்மல்கச் செலுத்தினர்.

மாலை 4.20மணிக்கு ஆறு போராளிகளின் புகழுடம்புகள் அவ் இடத்திலிருந்து ஆடியபாதம் வீதி ஊடாக இராசபாதைவீதியையடைந்து கோப்பாய் மாவீரர்கள் மயானத்தில் தீயுடன் சங்கமமாயின, 7

**மணலாற்றில்—**

படையினருக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதென்றும் தெரியவந்துள்ளது. 79

**பொது மக்கள்...**

முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

இதுவரையில் 200க்கு மேற்பட்டோர் இரத்ததானம் செய்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (79, 74)

**ஓடிய...**

ஓடினார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு டி. ஐ ஜி உட்பட பன்னிரண்டு அதிகாரிகளே இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ப-11

**இடம்பெயர்ந்..**

குறிப்பாக வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில், குடத்தனை, ஆகிய இடங்களிலுள்ள கோயில்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளவர்களுக்கு முதலில் வழங்கப்படும் எனவும் செயலகவட்டாரங்கள் தெரிவித்தன. நாகர்கோயிலில் ஆயிரம் குடும்பங்களும், குடத்தனையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் தங்கியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. 74

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 14.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.